மலர்-2 இதழ்-6

DECEMBER 2025

BALA MANDIR

MALARUM MOTTUKKAL

www.kinshipcare.in www.balamandir.org



மலரும் மொட்டுக்கள்

- DIWALI CELEBRATION
- CHILDREN'S DAY
- COIMBATORE CAMP
- CHENGALPATTU CAMP
- MULTIPLE INTELLIGENCE
- BLOCK CONNECT
- PARENT'S CORNER
- CHILDREN'S CORNER

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

பால மந்திரில் தீபாவளி கொண்டாட்டம்

இருள் நீக்கும் ஒளி திருநாளான தீபாவளி பாலமந்திரில் இந்த ஆண்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. குழந்தைகள் புத்தாடைகள் அணிந்து, பட்டாசுகள் வெடித்து, இனிப்புகளை பகிர்ந்து இத்திருநாளை மகிழ்ச்சியாக கொண்டாடினர். பணியாளர்களின் மேற்பார்வையில் குழுக்களாக இணைந்து ஆர்வத்துடன் பட்டாசுக்கள் வெடித்து, அனைவரையும் உற்சாகப்படுத்தினர். குழந்தைகளின் சிரிப்பு, பட்டாசுகளின் ஒளி-ஒலி சேர்ந்து வளாகமே பண்டிகை மகிழ்ச்சியில் ஒளிர்ந்தது.














பால மந்திர் குழந்தைகள் தினக் கொண்டாட்டம்:

ஒவ்வொரு குழந்தைக்கும் மகிழ்ச்சி, பாதுகாப்பு மற்றும் கனவு காண உரிமை உண்டு என்ற எண்ணத்துடன், இவ்வாண்டு குழந்தைகள் தின விழா பால மந்திரில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்த வகையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவின் நோக்கம், குழந்தைகளில் கருணையும் தைரியமும் வளர்ப்பதாக இருந்தது.



குழந்தைகள் நடனம், இசை, கலை மற்றும் விளையாட்டுகள் மூலம் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். பால மந்திரில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் மதிப்பும், திறனும் கொண்டு, வளமான எதிர்காலத்திற்கான வாய்ப்புகள் உள்ளவர்கள் என்பதை இந்தக் கொண்டாட்டம் வெளிப்படுத்தியது.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

கின்ஷிப் கேர் முகாம்கள்

பால மந்திரின் மேலாண்மை உறுப்பினர்களும் கின்ஷிப் கேர் குடும்பங்களும் நேரில் சந்திக்கும் KC முகாம்கள், அக்டோபர் மாதம் 25 ஆம் தேதி செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைப்பெற்றது. குழந்தைகள் மற்றும் பெற்றோரின் தேவைகள் தெரிந்து கொள்ளவும் மற்றும் KC -யின் புதிய திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கவும் இந்த முகாம்கள் நல்ல வாய்ப்பாக அமைகின்றது.

KINSHIP CARE





பாலா மந்திரின் கின்ஷிப் கேர் திட்டம் பல்வேறு பகுதிகளில் இருந்து 1135 குடும்பங்களைச் சேர்ந்த 1980 குழந்தைகளுக்கு ஆதரவு வழங்கி வருகிறது.

கின்ஷிப் கேர் நிகழ்வு – செங்கல்பட்டு



முதலில் சமூகப்பணியாளர் திரு பெஞ்சமின் பெற்றோர் மற்றும் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் பாடல்கள் பாடி உற்சாகப்படுத்தினார். அதைத்தொடர்ந்து திரு. பொன்னுசாமி அவர்கள் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியைத் தொடங்கினார். KC குடும்பங்கள் வழங்கும் ஒத்துழைப்பையும் அவர்களின் ஈடுபாட்டையும் அவர் வெகுவாக பாராட்டினார்.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in








பின்னர், திருமதி சரண்யா தேவி (RSW) அவர்கள் KC. திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து பெற்றோர்களுக்கு விளக்கி, குழந்தைகள் தவறாது வகுப்பில் பங்கேற்பது, நேரத்திற்கு இணைதல் மற்றும் சிறந்த கற்றல் சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறினார்.

தாய்மார்கள் தங்களின் அனுபவங்கள் மற்றும் KC-யினால் தங்களுக்கு ஏற்ப்பட்ட நேர்மறை மாற்றங்கள் குறித்து இக்கூட்டத்தில் பகிர்ந்தனர். திரு. ரவி அவர்களின் ஊக்கமளிக்கும் உரை, குடும்பங்களின் உற்சாகத்தை மேலும் உயர்த்தியது.







Sankara Schools Kinship Campaign

சங்கரா பள்ளிகள் – கின்ஷிப் கேம்பைன் 2025- நவம்பர் 2025 முதல் 7 டிசம்பர் 2025 வரை நடைபெற்றது. இது சங்கரா கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய ஒரு கூட்டு நிதி திரட்டும் முயற்சி ஆகும். இதில் ஸ்ரீ சங்கரா சீனியர் செக்கண்டரி பள்ளி (SSS), KSN சீனியர் செக்கண்டரி பள்ளி (KSN) மற்றும் ஸ்ரீ சங்கரா வித்யாஷ்ரமம் (SSV) ஆகிய மூன்று பள்ளிகள் கலந்துக்கொண்டனர்.





மாணவர்களின் உற்சாக பங்கேற்ப்பினாலும், நன்கொடையாளர்களின் ஆதரவினாலும் மிகவும் வெற்றிகரமாக இந்த பிரச்சாரம் நடைபெற்றது. இதன் மூலம், மாணவர்களும் பள்ளியும் சமூக நலனில் அதிக அக்கறை காட்டுகின்றனர் என்பது புரிகிறது.

இந்த பிரச்சாரத்தில் 106 மாணவர் தன்னார்வலர்கள் மற்றும் 747 நன்கொடையாளர்கள் கலந்து கொண்டு, மொத்தமாக ரூ. 5,71,481/- நிதி திரட்டப்பட்டது. இந்த நிதி திரட்டும் முயற்சி வெற்றிபெற, தன்னார்வலர்களின் எண்ணிக்கை மட்டுமல்லாமல், நல்ல தகவல் தொடர்பு, நன்கொடையாளர்களுடன் கொண்ட நல்லுறவு, மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகியவை முக்கிய அம்சங்கள் ஆகும்.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

கின்ஷிப் கேர் முகாம்கள்- கோயம்புத்தூர்:



கோயம்பத்தூரில் நடைபெற்ற பால மந்திர் கின்ஷிப் கேர் இரண்டாம் ஆண்டு முகாம், நவம்பர் 2ஆம் தேதி கலைஞர் கருணாநிதி கல்லூரியில் நடைபெற்றது. இதில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 175 பேர் கலந்து கொண்டனர்.









சிறப்பு விருந்தினராக திரு. சேரன் மு. தமிழரசன், PO – Non Institutional Care, அவர்கள் கலந்து கொண்டு, குழந்தை பாதுகாப்பின் அவசியம், கண்காணிப்பற்ற குழந்தைகள் சந்திக்கும் அபாயங்கள் மற்றும் அன்பும் பொறுமையும் கொண்ட குழந்தை வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்து பேசினார். மேலும், அன்பு கரங்கள் திட்டம், குழந்தை பாதுகாப்பு செயல்திட்டங்கள், CARA தத்தெடுப்பு நடைமுறைகள் மற்றும் தாய்ப்பால் தானம் பற்றியும் விளக்கினார். கின்ஷிப் கேர் திட்டம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருவதை அவர் பாராட்டினார். பெற்றோர்களும் மாணவர்களும் குழந்தைகளின் தன்னம்பிக்கை, வாசிப்பு திறன் மற்றும் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பகிர்ந்தனர்.









குழந்தைகளுக்காக வரைதல், பலூன் விளையாட்டுகள், காகிதக் கைவினை, களிமண் கலை, திரைப்பட நேரம் மற்றும் தொழில் வழிகாட்டல் போன்ற செயல்பாடுகள் நடத்தப்பட்டன.







மேலும், தொகுதி வாரியாக தாய்மார்கள் பிரிக்கப்பட்டு Block Connect நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அருகில் வாழும் தாய்மார்களுக்கிடையே உறவு வளர்த்தலும், ஒருவருக்கொருவர் ஆதரவு வழங்குவதும் இதன் நோக்கமாக இருந்தது. தகவல் பகிர்வுக்காக வாட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டது. சமூக பணியாளர்கள் இந்தக் குழுக்களை வழிநடத்தி, தாய்மார்களுக்கிடையே உரையாடலையும் உறவையும் ஏற்படுத்தினர்.





இந்தச் சந்திப்பு பெற்றோர், குழந்தைகள் மற்றும் சமூக பணியாளர்களுக்கிடையே உறவை வலுப்படுத்தி, தாய்மார்களுக்கு இக்குழுவில் தாங்களும் ஒரு அங்கம் என்ற உணர்வை ஏற்படுத்தியது. குழந்தைகளின் நலனுக்கும் வளமான எதிர்காலத்திற்கும் அனைவரும் ஒன்றிணைந்து சமூகமாக செயல்படுவோம் என்ற உறுதியுடன், இந்நிகழ்ச்சி மகிழ்ச்சியுடன் நிறைவடைந்தது. இவ்வாறு சமூகமாக செயல்பட்டால் பால மந்திர் கின்ஷிப் கேர் திட்டம் எதிர்காலத்தில் இன்னும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.



வழிகாட்டல் திட்டம் Mentoring programme

10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான அருணோதயா நிறுவனம் நடத்தும் வழிகாட்டி வகுப்புகள், இப்போது மீண்டும் மூன்று புதிய குழுக்களுடன் தொடங்கப்பட்டுள்ளது. மொத்தம் 18 மாணவர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். மாணவரின் கல்வி மற்றும் தனிமனித வளர்ச்சிக்கு தேவையான வாழ்க்கை திறன்கள் பற்றின விழிப்புணர்வுகள் இந்த வகுப்பில் கொடுக்கப்படுகின்றன. இந்த வகுப்புகளின் மூலம் மாணவர்களின் தன்னம்பிக்கையும், ஊக்கமும் அதிகரிக்கிறது.



BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

BLOCK CONNECT – காஞ்சிபுரம்:



காஞ்சிபுரம் சமூக பணியாளர் திரு. பெஞ்சமின் அவர்களின் வழிநடத்தலில், அக்டோபர் 19ஆம் தேதி உத்திரமேரூரில் தீபாவளியை முன்னிட்டு Block Connect நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் கலந்து கொண்டனர்.









அருகிலுள்ள ஏரிக்கரையில் அனைவரும் ஒன்றுகூடி சந்தித்து, பெற்றோர்கள் ஒருவருடன் ஒருவர் கலந்துரையாடும் வாய்ப்பைப் பெற்றனர். இதன் மூலம் அவர்களுக்கிடையே நல்ல புரிதலும் நெருக்கமும் உருவானது. அதன் பின்னர் அனைவரும் ஒன்றாக சேர்ந்து பட்டாசுகள் வெடித்து, தீபாவளியின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு குடும்பங்களுக்கிடையேயான பிணைப்பை மேலும் வலுப்படுத்தியது. குறிப்பாக, தனிமையில் இருந்த தாய்மார்களுக்கு இக்குழுவில் தாங்களும் ஒரு அங்கம் என்ற உணர்வை ஏற்படுத்தியது. மொத்தத்தில், இந்நிகழ்ச்சி அனைவருக்கும் மகிழ்ச்சியும் நினைவில் நிலைக்கும் அனுபவமாக அமைந்தது.

Multiple Intelligence (மல்டிபில் இன்டலிஜன்ட்)







கல்வி கற்பதில் சிரமப்படும் குழந்தைகள், தங்களை திறமையற்றவர்கள் என எண்ணிக் கொள்வது வழக்கம். ஆனால் ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமான பல்வேறு திறன்களை கொண்டுள்ளார்கள். இந்த எண்ணத்தை மாற்றவும், குழந்தைகள் தங்கள் தனித்திறன்களை அறிந்து வளர்த்துக் கொள்ளவும், மல்டிபில் இன்டலிஜன்ட் வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக பத்து குழந்தைகள் இந்த வகுப்புகளில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தனித்திறனை அறிந்துகொள்ளும் வகையில் விளையாட்டுகள், படைப்பாற்றல் செயல்பாடுகள் மற்றும் கைவேலைப்பாடுகள் கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் தன்னம்பிக்கை வளர்த்து, "நான் திறமையானவன்/வள்" என்ற எண்ணம் உருவாகுகிறது.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

பெற்றோர் பகுதி

முந்தைய பதிப்புகளில் "நல்ல மற்றும் கெட்ட தொடுதல்" பற்றி பார்த்தோம். இந்த மாதம், கெட்ட / பாதுகாப்பற்ற தொடுதல் ஏற்பட்டால் குழந்தை என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பார்க்கலாம்.





கெட்ட/பாதுகாப்பற்ற தொடுதலுக்கு, குழந்தை செய்ய வேண்டியவை:

- "இல்லை!" என்று தெளிவாகவும் சத்தமாகவும் சொல்வது.
- உடனே அங்கிருந்து விலகி பாதுகாப்பான இடத்திற்குச் செல்வது.
- நம்பகமான பெரியவரிடம் சொல்வது.
- எதையும் ரகசியமாக வைத்துக் கொள்ள கூடாது.
- ஒருவர் கேட்கவில்லை என்றால் மற்றொரு பெரியவரிடம் கூறுவது.
- உங்களுக்கு அசௌகரியம் அளிக்கும் யாருடனும் தனியாக இருக்க வேண்டாம்.
- இது உங்கள் தவறு அல்ல என்பதை நினைவில் கொள்ளவும்.
- பேச முடியாமல் இருந்தால் எழுதவும் / வரைந்து காட்டவும்.

எங்கள் நோக்கம் குழந்தைகளை பயமுறுத்துவது அல்ல; அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது.

Children corner

CANDLE AND THE SUN





A little candle 🕯️ always watched the powerful Sun ☀️ and felt small and useless, believing it will never be as bright or grand as the Sun. One night, the village experienced a blackout, leaving the homes in darkness and fear. In this darkness, a hand lights this little candle 🕯️. A tiny flame dancing and glowing, provided light and comfort to the villagers. The candle now realized that, it was not the Sun but its light was essential in this darkness, bringing hope to the people.

The Moral: Even a small effort can be life changing in the right movement.

👍 Don't compare yourself to others.
👍 Even the smallest can be mighty
👍 Recognize your own purpose.



BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIEVERS



கீதா ஸ்ரீ, மோனிஷ், பூவரசன். காஞ்சிபுரம் கராத்தே



சாத்திரியா சாரா
(சேலம்) யோகா



லோஹிதா (விழுப்புரம்)
திருக்குறள் எழுதும் போட்டி



தர்ஷன் (விழுப்புரம்)
ஓவியப் போட்டி



கிஷோர் (திருப்பத்தூர்)
ஓவியப்போட்டி.



ஹெலினா (திருவள்ளூர்)
யோகா போட்டி



சைருத் விக்கர் (சென்னை)
கோ-கோ போட்டி

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIEVERS



பிரின்சி (கடலூர்)
ஓட்டப் போட்டி



தினேஷ் (திருவள்ளூர்)
– கால்பந்து



ஆர். ராகுல் (திண்டுக்கல்)
ரோபோட்டிக்ஸ்



ஹென்னா கிரிஸில்லா
(சென்னை) ஓவியப்போட்டி



தவன் ரெய்னோ
(திண்டுக்கல்)
வில்வித்தைப் போட்டி



மனோஜ் (சென்னை)
சேர்ந்த பேச்சுப் போட்டி



பிரிந்தா (சேலம்)
கராத்தே போட்டி

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!